# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:

# சரணாகதன் இங்குள்ள காலம் இருக்கவேண்டிய முறை



உத்தரக்ருத்யாதிகாரம் (குறிப்புகள்) - ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

ஆசார்யன் விஷயத்தில் நன்றி அறிதல் :

1. ஒரு சரணாகதன், தனக்கு கிடைகப் போகிற மோக்ஷத்திற்கு காரணம் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாரயணனிடமிருந்து தொடங்கி தற்போது உள்ள நமது ஆசார்யன் வரை உள்ள ஆசார்ய பரம்பரையால் நமக்கு கிடைத்த க்ருபா கடாக்ஷம் என்று உணர வேண்டும். ஆக, ஆசார்யன் விஷயத்தில் நன்றி அறிதல் உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

2. 'ஆசிணோதிஹி ஷாஸ்த்ராத்தான் ஆசரே ஸ்தாபயத்யபி. ஸ்வயம் ஆசரதே யஸ்மாத் தஸ்மாத் ஆசார்ய உச்யதே' அதாவது, விதி நிஷேத சாஸ்த்ரங்களை ( சாஸ்த்ரப் படி, செய்ய வேண்டுவன மற்றும் செய்யக் கூடாதவைகளை) பிழை இல்லாமல் கற்று, சிஷ்யர்களுக்கு கற்றுவித்து அதன்படி தான் நடப்பவனே ஆசார்யன் ஆகிறான்.

3. 'ஆசார்யவான் புருஷோ வேத'என்ற வாக்கியப்படி 'நல்ல ஆசார்யனைப் பெற்றால் மட்டுமே பரம் பொருளை அறிய முடியும்'.
'ஸ ச ஆசார்ய வம்சோ ஜ்ஞேய; அஸௌ அஸௌ இதி ஆபகவத்த:' அதாவது, 'ஆத்ம விஷயங்களை' பற்றிய அறிவை பெற ஒரு சிறந்த 'ஆசார்ய பரம்பரையை' பார்த்தே ஆசார்யனை தேர்ந்தெடுக்க வேண்டும். ஆசார்யனுக்கு தெளிவான சாஸ்த்ர ஞானம் மிக முக்கியம். இந்த ஞானத்தைப் பெறுவதற்காக, ஸ்ரீமந் நாராயணன் தொடங்கி தற்போது ஞானத்தை வழங்கும் ஆசார்யன் வரை உள்ள ஆசார்ய பரம்பரையை எப்போதும் அனுஸந்தானம் (நினைத்து ஸேவித்தல்) செய்வது முக்கியம்.


4. 'பாபிஷ்ட: க்ஷத்ர பந்துஸ்ச புண்டரீக்ஷ புண்யக்ருதா ஆசார்ய வத்தயா முக்தௌ தஸ்மாத் ஆசார்யவான் பவேத்' அதாவது, மிகுந்த பாபத்தைச் செய்து போன க்ஷத்ரபந்துவும், மிகுந்த புண்யங்களையே செய்து வந்த புண்டரீகனும், ஆசார்ய சம்பந்தம் பெற்றதானாலேயே மோக்ஷத்தை அடைந்தார்கள், என சரித்திரம். ஆக, ஒருவனுக்கு மோக்ஷ பலன் கிடைக்க, சாஸ்த்ர ஞானத்தை தெளிவு படக் கொடுத்து, 'சரணாகதி' அனுஷ்டானத்தை செய்வித்து, ஆசார்யர்கள் பெரும் உதவி செய்கிறார் என்பதை உணரலாம்.

5. 'வீசும் சிறகால் பறத்திர் விண்ணாடு நுங்கட்கெளிது, பேசும் படியன்ன பேசியும் போவது, நெய்தொடுவுண், டேசும் படியன்ன செய்யுமெம் மீசர்விண் ணோர்பிரானார், மாசின் மலரடிக் கீழ்எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே' அதாவது, ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்த்தில், 'எங்களுக்குத் தலைவரும் நித்யஸூரிகளுக்கு நாயகனான எம்பெருமானின் திருவடி தாமரையில் எம்மை சேர்விக்கும் ஆசார்யர்களே!' என அருளியதால் ஆசார்யர்கள் செய்யும் உபகாரம் விவரணமாகிறது.

6. 'நல்ல என் தோழி. நாக ணைமிசை நம்பரர், செல்வர் பெரியர் சிறுமா னிடவர்நாம் செய்வதென், வில்லி புதுவை விட்டுசித் தர்தங்கள் தேவரை, வல்ல பரிசு வருவிப்ப ரேலது காண்டுமே' அதாவது, கோதை நாச்சியார் அருளிச்செய்த நாச்சியார் திருமொழியில் உள்ளது: 'தான் ஆசார்யராக கொண்ட பெரியாழ்வார், எம்பெருமானை தன்னால் முடிந்த முயற்சிகளால் இங்கு வருமாறு அழைப்பராகில், அவனை ஸேவிக்கப் பெறுவோம்'.

7. 'ஏற்றி மனத்தெழில் ஞானவிளக்கை இருளனைத்தும், மாற்றினவர்க்கொரு கைம்மாறு மாயனும் காணகில்லான், போற்றியுகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்குபுகழ், சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே' அதாவது, 'ஆத்ம விஷயத்தில், சந்தேகத்துக்கு உறியனவாயும் தவறானதாயும் இருந்து வந்த, நமது ஞான குறைபாடுகளை அகற்றி, சாஸ்த்ரத்தில் உள்ளபடி, பிழையற ஞான விளக்கை நம்முள் ஏற்றி வைத்து, பல பிறவிகளாக துக்க மூலமான சம்சார கடலில் சிக்கித் தவிக்கும் நம்மை அதிலிருந்து விடுபட உதவிய நம் ஆசார்யர்களின் உதவிக்கு என்ன கைம்மாறு (பதில் உதவி) செய்ய முடியும் என எம்பெருமானும் அறிவதில்லை.

அந்த ஆசார்யர்களைப் போற்றி உகப்பதும் எப்போதும் நினைவில் கொள்வதுமே நாம் செய்யக் கூடிய ஒரு சிறு தொண்டு'. ஆக, ஆசார்யன் விஷயத்தில் நன்றி அறிதல் மிக மிக அவசியம். அதுவும், உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அமசம.



எம்பெருமான் விஷயத்தில் நன்றி அறிதல் :

1. ஒரு சரணாகதன், தனக்கு கிடைகப் போகிற துக்கமற்ற ஸுக ரூபமான மோக்ஷத்திற்கு முக்கிய காரணமான ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாரயணனிடத்தில் நன்றியோடு இருப்பது உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

2. அநாதி பிறவிகளாக சாஸ்த்ரத்தில் விதித்த கட்டளைகளை மீறி செயல்படும் ஜீவர்களுக்கு, அதன் காரணமாக துக்கமயமான மாறி மாறி வரும் சம்சார பந்தத்திலிருந்து விடு படுத்துவதற்காக, கருணை உள்ளங்கொண்ட ஸர்வேஸ்வரன், இரண்டு வழிகளை அருளிச் செய்கிறான். 'பக்த்யா பரமயா வாபி ப்ரபத்யா வா மஹாமதே. ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்யா: மம கைங்கர்ய லிப்ஸுபி:' அதாவது, ' அவரவர்கள் தகுதிக்கு ஏற்ப 'பக்தி யோகமோ' அல்லது 'சரணாகதி அனுஷ்டானமோ' செய்து சம்சார பந்தத்திலிருந்து விடுபட்டு மோக்ஷமாகிற ஸுக ரூபமான அவன் கைங்கர்யத்தில் ஈடுபட முடியும். வேறு ஒரு வழியாலும் மோக்ஷத்தைப் பெற முடியாது'.

3. எண்ணிக்கையற்ற நற்குணங்களைக் கொண்ட ஸர்வேஸ்வரனுக்கு, சம்சாரி ஜீவர்களை காப்பதற்கான முக்கிய குணங்கள் :

# வாத்ஸல்யம் - தன் அடியார்களின் குற்றத்தைப் பாராமல் ஏற்றுக் கொள்வது

# ஸௌசீல்யம் - அவதார காலத்தில் பாப சம்பந்தம் உடையவர்களிடமும் சரி சமமாக கலந்து பழகுதல்

# ஸௌலப்யம் - எக்காலத்திலும் பாப சம்பந்தமே அற்ற நித்யஸூரிகளுக்கு சமமான போகத்தை முக்தர்களுக்கும் அளிப்பது

# ஸ்வாமித்வம் - அனைத்து ஜீவர்களுக்கும் அவன் ஸ்வாமி; அதாவது, ஜீவர்களை அடிமை கொள்ளும் உரிமை உடையவன்

# ஸர்வ சக்திமத்வம் - பிறரால் செய்ய முடியாததை எளிதில் செய்யக் கூடியவன், ஸகல பாபங்களையும் நீக்க வல்லவன்


# நிரபேக்ஷ ஸ்வாதந்த்ரயம் - ஸர்வேஸ்வரன் மோக்ஷம் தர ஸங்கல்பித்தால், அதை தடுக்கும் திறன் யாரிடமும் கிடையாது

4.'கருளுடைய பொழில்மருதும் கதக்களிறும், பிலம்பனையும் கடிய மாவும், உருளுடைய சகடரையும் மல்லரையும், உடையவிட் டோசை கேட்டான், இருளகற்று மெறிகதிரோன்

மண்டலத்தூடேற்றிவைத் தேணி வாங்கி, அருள்கொடுத்திட் டடியவரை யாட்கொள்வான் அமருமூ ரணிய ரங்கமே’

அதாவது, பெரியாழ்வார் திருமொழியில் அருளிச்செய்தபடி, ‘அடியார்களை பரமபதத்திற்கான ஏணியில் ஏற்றி இருத்தி, பிறகு இறங்குவதற்கு காரணமான பகவத் ஸங்கல்பமாகிற ஏணியை விலக்கி விடுபவன்’.

5. ’சீயினால் செறிந்தேறிய புண்மேல் செற்ற லேறிக் குழம்பிருந்து எங்கும், ஈயினால்அரிப் புண்டு மயங்கி எல்லை வாய்ச்சென்று சேர்வதன் முன்னம், வாயி னால்நமோ நாரணா வென்று மத்த கத்திடைக் கைகளைக் கூப்பி போயினால் பின்னை இத்திசைக்கு என்றும் பிணைக்கொ டுக்கிலும் போகவொட் டாரே’



அதாவது, பெரியாழ்வார் திருமொழியில் அருளிச்செய்தபடி, ‘துக்கமயமான சம்சார கடலில் இருந்து விலகி ஶ்ரீவைகுண்டத்தை அடைந்த தன் அடியாரை, ஜகந்மாதாவான பெரிய பிராட்டியாரையே பிணையாக (ஜாமீனாக) கொடுத்தாலும், கர்ம சம்பந்தமாக சம்சாரத்திற்கு மறுபடி போக விடாமல் காக்கும் எம்பெருமான்’.

6. ’சன்ம சன்மாந்தரம் காத்து அடியார்களைக் கொண்டுபோய் தன்மை பெறுத்தித் தன் தாளிணைக்கீழ்க் கொள்ளும் அப்பனை தொன்மை பிதற்ற வல்லாரைப் பிதற்றும் அவர் கண்டீர் நன்மை பெறுத்து எம்மை நாள் உய்யக்கொள்கின்ற நம்பரே’

அதாவது, ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில் கூறியபடி, ‘யுகம் தோரும் தானும் இவ்வுலகில் அவதரித்து, அடியார்களைக் காத்து, பின் அவர்களை ஶ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துச் சென்று, அவர்களுக்கு இயற்கையான ஸ்வரூபத்தை வெளிப்படுத்தி தன் திருவடி நிழலில் வைத்துக் கொள்ளும் ஸர்வேஸ்வரன்’.

ஆக, ஸ்வபாவத்திலேயே கருணை உள்ளம் கொண்ட ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனிடத்தில் (அடியார்களைக் காக்க சுலபமான சரணாகதி அனுஷ்டானத்தை விதித்து, அந்த அனுஷ்டானத்தை ஒரு ஸதாசார்யன் மூலமாக செய்வித்து, மோக்ஷம் அளிக்க இருப்பதை உணர்ந்து) இங்குள்ள காலம் நன்றி கொள்ளுதல் ஒரு சரணாகதனுக்கு பொருத்தமான செயலாகும்.

உத்தரக்ருயம் அதிகாரத்தின் முடிவுரை :(மனோவாக்குகாயங்களால் விலக்கவும் ஏற்கவும் உரிய அம்ஸங்கள்)

1. ஒரு சரணாகதன் இங்குள்ள காலம் தான் செய்ய வேண்டுவதை 15வது அதிகாரத்தில் (உத்தரக்ருத்யம் என்கிற அதிகாரத்தில்) விவரித்து அருளினார் ஸ்வாமி தேசிகன். அதில், ஒரு சரணாகதன், தன் எண்ணங்கள், சொற்கள் மற்றும் செயல்களைக் கொண்டு சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு இங்குள்ள காலம் செய்து போக வேண்டுவதை விளக்கி அருளினார்

.

நாம் அதை கடந்த 12 தினங்களாக கண்டு அனுபவித்தோம்.

2. ‘விஷஸ்ய விஷயாணாம் ச தூரமத்யந்தமந்தரம். உப்புக்தம் விஷம் ஹந்தி விஷயா: ஸ்மரணாதபி’

அதாவது, ‘விஷம் மற்றும் விஷயம் என்ற இரு சொற்களுக்கும் ஒரு சிறிய வேறுபாடு தான் உள்ளது. விஷம் அருந்தினவனுக்கு தான் தீங்கு விளைவிக்கும். ஆனால், (உலக) விஷயத்தை நினைத்த மாத்திர்திலேயே, அதை அடைய ஆசை, அதற்கு தடையானவற்றில் கோபம், அதை அடைய தகாத நடவடிக்கைகள் போன்ற, ஒரு சரணாகதன் இயல்புக்கு ஒவ்வாத, அனைத்து செயற்பாடுகளும் தோன்றும்’.

3. ‘ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம், பாவி யேனைப் பலநீ காட்டிப் படுப்பாயோ, தாவி வையம் கொண்ட தடந்தா மரைகட்கே, கூவிக் கொள்ளும் கால மின்னம் குறுகாதோ?’

அதாவது, ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில் கூறியபடி, ‘ஐந்து புலன்களைக் (பார்ப்பது, கேட்பது, நுகர்வது, சுவைப்பது, தொடுவது) கொண்டு சிற்றின்பங்களான உலக விஷயங்களில் பாபியான என்னை ஈடுபடுத்தி ஸர்வேஸ்வரனான நீ வருத்தப் படுத்தலாமா? உன் திருவடியை அடைகிற தருணம் எனக்கு விரைவில் வாராதோ?’ என்று உலக விஷய அனுபவத்தை தன் இயல்பான செயல்களுக்கு தடை என விவரிக்கிறார்.

4. ஆக, உலக விஷயங்களில் புலன்களைச் செலுத்தாமல், தன் வாழ்க்கை கடமைகளைச் செய்து கொண்டு, ஒரு சரணாகதன் இங்குள்ள காலம் தான் மனத்தாலும், சொற்களாலும் மற்றும் செயல்களாலும் நடத்த வேண்டுவதை ஸ்வாமி தேசிகன் சுருக்கமாக விளக்கி அருளினார் இந்த அதிகாரத்தில்:

# சரணாகதி பலனில் ஆசை குறையாமல் இருக்க - மறக்க வேண்டுவன - உலக விஷய இன்பங்கள்

# நன்றி மறவாமல் இருக்க - நினைத்தே இருக்க வேண்டுவன - ஆசார்யன் முதல் கடாக்ஷம் தொடங்கி செய்த உபகாரம்

# தன் தகுதி குறைவை மறவாமல் இருக்க - சொல்லாமல் இருக்க வேண்டுவன - தன் உயர்த்தி மற்றும் மற்றவர் தாழ்ச்சி

# சரணாகதியில் தெளிவு குறையாமல் இருக்க - சொல்லிக் கொண்டே இருக்க வேண்டுவன - த்வய மந்திரம்

# எம்பெருமானுக்கு சீற்றம் உண்டாகாமல் இருக்க - மனது, வாக்கு, காயத்தினால் செய்யக் கூடாதன - பாகவத அபசாரம்

# பலனில் ஆசை தடைபடாதிருக்க - முக்கரணங்களால் செய்ய வேண்டுவன - பகவத்-பாகவத-ஆசார்ய கைங்கர்யம்

5.’ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிக து:கவிக்னகந்த ரஹிதஸ்த்வம் த்வயமர்தானுஸந்தானேன ஸஹ ஸதைவம் வக்தா யாவச்சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ’

அதாவது, பகவத் ராமானுஜர் அருளிச்செய்த சரணாகதி கத்யத்தில் கூறியபடி, ஒரு சரணாகதன் இங்குள்ள த்வய மந்த்ரத்தை அர்த்தத்துடன் அனுஸந்தித்துக் கொண்டு ஸுகமாக இருக்க வேண்டும்.

6. ’விண்ணவர் வேண்டி விலக்கின்றி மேவும் அடிமை யெல்லாம், மண்ணுலகத்தின் மகிழ்ந்து அடைகின்றனர் வண் துவரைக் கண்ணன் அடைக்கலம் கொள்ளக் கடன்கள் கழற்றிய நம் பண் அமரும் தமிழ் வேதம் அறிந்த பகவர்களே’

அதாவது, ‘ஸர்வேஸ்வரனான கண்ணன், சரணாகதி அனுஷ்டானத்தை முடித்தவர்கள் விஷயத்தில், தான் காக்கப் பட வேண்டியவர்களாகக் கருதி மோக்ஷத்திற்காக உறுதி அளித்தபின், சாஸ்த்ர விதிகளுக்கு உட்படாத பரமபதத்தில் இருக்கும் நித்யஸூரிகள் தடையின்றி அன்புடன் செய்யும் கைங்கர்யங்கள் அனைத்தையும், இங்குள்ள காலம் சரணாகதர்கள் ஸந்தோஷித்து உத்தரக்ருத்யமாக (சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள பலனின் செயல்களாக) அனுஷ்டிக்கப் பெறுவர்’.

தொடரும். . .

